**மோட்டார் வாகன விபத்து வழக்குகள், மாவட்ட சிறப்பு தீர்ப்பாயம், காஞ்சிபுரம்**
**காஞ்சிபுரம்**

| வழக்கு எண் | MCOP | 130 | of | 2018 |
|---|---|---|---|---|

2026–ம் ஆண்டு ஜீலை திங்கள் 16–ம் நாளான இன்று

**மனுதாரர்** தரப்பில் 1–வது சாட்சியின் வாக்குமூலமானது 1873–ம் ஆண்டின் 10–வது சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு. B.Prabu, Assistant என்பவரால் சட்டத்தின் படி பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயா் | திரு.S.ரவி | கிராமம் | |
| தந்தை பெயா் | திரு.சுப்புரமணியன் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

**நாள் 16.07.2026 – ம.சா–1**

**<u>முதல் விசாரணை: (2வது எதிர்மனுதாரர் தரப்பில்)</u>**

நான் தற்போது சேலம் மேற்கு, வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு வட்டாரப் போக்குவரத்து கழக அலுவலர் வழங்கிய அதிகாரக் கடிதத்தை தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.த.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சம்மனின் அருண், த/பெ. ஜகதீஸ்வரன், கதவு எண்.74, சங்ககிரி ரோடு, சேலம் என்ற முகவரியில் உள்ள நபருக்குறிய டிரைவிங் லைசன்ஸ் விவரங்கள் கோரப்பட்டிருந்தது. எங்கள் அலுவலக ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எங்கள் அலுவலக கணினி ஆவணங்களை பரிசீலிசனை செய்தததில் மேற்படி நபருக்கு TN27 19990005143 என்ற எண்ணில் போக்குவரத்து அல்லாத வாகனங்களை ஓட்டுவதற்கு 08.09.2004 முதல்

07.09.2024 வரை ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இலகுரக போக்குவரத்து வாகனம் ஓட்டுவதற்கு 03.09.2001–ல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி லைசன்ஸ் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும். ஆனால் 03.09.2007 முதல் 27.02.2011 வரையிலும், மேலும் 28.02.2014 முதல் 31.03.2014 வரையிலும் புதுப்பிக்கப்படவில்லை. பின்னர் 01.04.2014 முதல் 31.03.2017 வரை இலகுரக போக்குவரத்து வாகனம் ஓட்ட புதுபிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விவரங்கள் அடங்கிய ஆவணத்தின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.த.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 24.03.2017 தேதி அன்று மேற்கண்ட நபருக்கு கனரக போக்குவரத்து வாகனம் ஓட்டுவதற்கு மேற்கண்ட நபருக்கு எங்கள் அலுவலகத்தில் லைசன்ஸ் இல்லை. மேற்கண்ட நபர் விபத்திற்கு பின்னர் 23.08.2017 அன்று கனரக கோக்குவரத்து வாகனம் ஓட்டுவதற்கு லைசன்ஸ் பெற்றுள்ளார்.

**குறுக்கு விசாரணை: (மனுதாரர் தரப்பில்)**

வாகனத்தின் எடை 12,000 கிலோவிற்கு மேல் இருக்கும் பட்சத்தில் அது கனரக வாகனத்தை குறிக்கும். மேற்படி எடை வாகனத்தின் பாரம் ஏற்றாத இடையை குறிப்பதாகும். பாரம் ஏற்றாத நிலையில் வண்டியின் எடை 7,500 கிலோவுக்கு கீழ் இருக்கும் பட்சத்தில் அது இலகுரக வாகனத்தை குறிக்கும். என்னிடம் காண்பிக்கப்படும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை வைத்து அந்த வாகனம் இலகுரக வாகனமா அல்லது கனரக வாகனமா என கூற இயலுமா என்றால் மேற்படி ஆவணத்தை வைத்து சொல்ல முடியாது அந்த வண்டிக்குரிய ஆர்.சி புத்தகத்தை பார்த்து அதன் எடையை கண்டுபிடித்து தான் சொல்ல முடியும். ஈச்சர் 10.90RHDE CAB Body என்ற வாகனத்தின் எங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வரப்பெற்றால் அது இலகுரக வாகனமா அல்லது கனரக வாகனமா என்று சொல்ல இயலுமா என்று அது பற்றி சொல்ல

இயலாது. எனக்கு போக்குவரத்து சட்டத் திட்டங்களை தெரியாத நிலையில் என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. தனியார் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் வாகனம் அனைத்தும் போக்குவரத்து அல்லாத வாகனம் என்று கருதப்படுகிறது. இதர வாகனங்கள் போக்குவரத்து வாகனங்கள் என்று கூறப்படுகிறது. எடையின் அடிப்படையில் எனது கனரக வாகனம், எது இலகுரக வாகனம் என என்னால் சொல்ல இயலாது. 28.02.2014 முதல் 31.03.2014 வரை சுமார் ஒரு மாதக் காலத்தில் டிரான்ஸ்போர்ட் வாகனத்திற்கு லைசன்ஸ் இல்லை என்று எ.ம.சா.ஆ–2ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது இலகுரக வாகனத்திற்கு தான் பொறுந்தும். நான் முதல் விசாரணை சாட்சியத்தில் இலகுரக வாகனத்திற்கு பொருந்தும் என்று கூறாமல் தற்போது மாற்றி இலகுரக வாகனத்திற்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எடையின் அடிப்படையில் ஒரு வாகனத்தை கனரக வாகனமா அல்லது இலகுரக வாகனமா என பகுத்து சொல்ல இயலாத நிலையில் நான் வெறும் டிரைவிங் லைசன்ஸ் பற்றிய Extract மட்டும் அடிப்படையாக வைத்து அந்த அடிப்படையில் இலகுரக வாகனம் ஓட்டுவதற்கு மேற்கண்ட நபருக்கு உரிமம் இல்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனக்கு மோட்டார் வாகன விதிகள் குறித்து அடிப்படை அறிவு இல்லாமல் குறுக்கு விசாரணையில் மாற்றி மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ–2ல் Heavy, Light என்ற வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு லைசன்ஸ் காலாவதி ஆகிவிட்டால் அதனை ஒரு வருடத்திற்குள் புதுபிக்கவேண்டும் அதன் பின்னர் புதுபிக்க வந்தால் மீண்டும் வாகனத்தை ஓட்டி தகுதியின் அடிப்படையில் புதுப்பிக்கப்படும். மேற்படி நபர் லைசன்சை புதுபிப்பதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்தார் என்றும், நாங்கள் தான் உரிய

காலத்திற்குள புதுபித்து தரவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 24.03.2017ல் மேற்படி நபருக்கு இலகுரக வாகனத்திற்கு லைசன்ஸ் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர் வேறு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் கனரக வாகனத்தை ஓட்டுவதற்கு லைசன்ஸ் பெற்றிருக்க வாய்ப்புள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை** இல்லை

PANDIARAJ Digitally signed by PANDIARAJ Date: 2026.07.21 10:46:17 +0530